# மாதாந்த சபைக்கூட்ட அறிக்கை – மார்ச் - 2023

## வவுனியா வடக்கு பிரதேச சபை

இடம் :- மாநாட்டு மண்டபம், வவுனியா வடக்கு பிரதேச சபை.

காலம் :- 15.03.2023 (புதன்கிழமை)

நேரம் :- காலை 10.00 மணி

**இக்கூட்டத்தில் கீழ்வரும் கௌரவ உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.**

1. கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன்
2. கௌரவ உபதவிசாளர் நாகலிங்கம் யோகராஜா
3. கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன்
4. கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி
5. கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன்
6. கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம்
7. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன்
8. கௌரவ உறுப்பினர் தேவராஜா ஜேசுதாகர்
9. கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா
10. கௌரவ உறுப்பினர் உடகெதர ஆராச்சிலகே மஹிந்த குலரத்ன
11. கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா
12. கௌரவ உறுப்பினர் கப்புவாகே விமலசிறி
13. கௌரவ உறுப்பினர் ஜயசுந்தர முதியன்சலாகே குணதிலக பண்டார
14. கௌரவ உறுப்பினர் ரஞ்சினி ஜெயகரன்
15. கௌரவ உறுப்பினர் உயன்வத்தேகெதர விஜேதுங்க
16. கௌரவ உறுப்பினர் ரத்நாயக்க முதியன்சலாகே காந்திலதா,
17. கௌரவ உறுப்பினர் விஜேகோன் முதியன்சேலாகே எரந்தி குமாரி
18. கௌரவ உறுப்பினர் நா.ந.அருண சாந்த பிரியதர்சன
19. கௌரவ உறுப்பினர் பொன்னையா தேவராசா
20. கௌரவ உறுப்பினர் பரமசிவம் பரத்
21. கௌரவ உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன்
22. கௌரவ உறுப்பினர் நடனறதனி யோகநாதன்
23. கௌரவ உறுப்பினர் ஆறுமுகம் அகிலேஸ்வரன்
24. கௌரவ உறுப்பினர் வீ.ஆ.நிஷாந்தி பிரதீபிகா குமாரி

வவுனியா வடக்கு பிரதேச சபையின் அறுபதாவது சபைக்கூட்டமானது சபையின் மாநாட்டு மண்டபத்தில் 15.03.2023 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன் அவர்களது தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

கௌரவ தவிசாளர் தனது தலைமையுரையில், சபையின் கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் சபை அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டார். தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் பற்றி தவிசாளரால் சபைக்கு தெளிவுபடுத்தப்பட்டது. பின்னர் கீழ் வரும் விடயங்கள் சபையினால் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/01**

கூட்டத்தில் கலந்துகொள்ளாத உறுப்பினர்கள் தொடர்பில், சபையின் கௌரவ உறுப்பினர் பிமல் தர்மதாச, கௌரவ உறுப்பினர் ந.வ.ஆ.நிஷாந்தகாமினி விக்ரமபால ஆகியோர் சுகவீனம் காரணமாக இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதென அறிவித்துள்ளதன் அடிப்படையில் மருத்துவ காரணங்களுக்காக அவர்களது விடுமுறையை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தல் என தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/02**

கடந்த மாத கூட்டறிக்கை அங்கீகரித்தல் தொடர்பில், கடந்த 2023 பெப்ரவரி மாத கூட்டறிக்கையில் எவ்வித திருத்தங்களும் இல்லாத நிலையில் குறித்த கூட்டறிக்கையினை சரியென ஏற்று அங்கீகரித்தல் என தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை கௌரவ உறுப்பினர் தேவராஜா ஜேசுதாகர் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/03**

சபையின் உள்ளகக்கணக்காய்வு உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகள், மாகாண கணக்காய்வு உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள், பொது கணக்காய்வு உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் என்பன சபையில் வாசித்து காண்பிக்கப்பட்டது இவ் ஐயவினாக்களுக்கான பதில்களை உடன் அனுப்பவும் அவற்றை நிவர்த்திசெய்யவும் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளை விடாது சேவையாற்றவேண்டும் என சபையால் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை கௌரவ உறுப்பினர் ஜயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/04**

கழிவகற்றல் நடவடிக்கைக்குப் பயன்படும் கலி பௌசர் பழுதடைந்துள்ளதால் அதன் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தவகையில் கிளிநொச்சி லக்சுமி காட்வெயாருக்கு ரூபா 216,000.00 கொடுப்பனவு வழற்குவதற்குமாக தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை

கௌரவ உறுப்பினர் ஜயசுந்தர முதியன்சலாகே குணதிலக பண்டார அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/05**

உழவியந்திரப் பெட்டியின் 4 ரயர்களும் 4 ரியூப்பும் கொள்வனவு செய்த வகையில் வவுனியா நந்தா ரயர் கவுஸ்கொள்வனவிற்கு ரூபா 238,000.00 கொடுப்பனவு வழற்க தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/06**

நெடுங்கேணி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு இயந்திரம் திருத்தம் செய்தமைக்காக மதவாச்சி TG Water Tecnologies Pvt Limited நிறுவனத்திற்கு ரூபா 207,500.00 கொடுப்பனவு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/07**

நெடுங்கேணி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நாவலர் சனசமுக நிலையத்திற்கு ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் வழங்குவதற்கும் ஒரு லீற்றர் நீர் 4.00 ரூபா வீதம் வழங்கவும் அதில் சபைக்கு 40% பெற்றுக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/08**

அலுவலகப் பாவனைக்காக காகிதாதிகள் கொள்வனவு செய்த வகையில் கயன் புத்தகசாலை வவுனியாவிற்கு ரூபா 179,000.00 வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர பரணீதரன் ஜமுனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/09**

புளியங்குளத்தில் அமைந்துள்ள சாரதிகள் இளைப்பாறும் நிலையத்தில் உள்ள நுளைவாயில் கதவை புணரமைப்பிற்காக கழற்றவேண்டியுள்ளதால் அவ் நுழைவாயிற்கதவை நெடுங்கேணி

மரக்கறிச்சந்தைக்கு மாற்றுவதற்கும் அதனால் ஏற்படும் செலவை நாட்கூலி அடிப்படையில் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/10**

WP PF – 7699 இலக்க பிக்கப் வாகனத்திற்கான ரயர் கொள்வனவு தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு அதன் அவசிய தேவைகருதி கொள்வனவு செய்யவும் கொடுப்பனவு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/11**

எமது சபையின் பராமரிப்பிலுள்ள வீதிகளில் இதுவரை 383 வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது மிகுதி 240 வீதிகளையும் உரிய முறையில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் வழிமொழிந்தார். இத் தீர்மானத்தினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/12**

நெடுங்கேணி மீன் சந்தைக்கு நீண்டகாலமாக தீந்தை பூசாமலிந்ததை கருத்திற்கொண்டு நெடுங்கேணி மீன் சந்தைக்கு தீந்தை பூசுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூபா 200,000.00 அனுமதித்து தீந்தை பூசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன் மரக்கறிச்சந்தைக்கு மழைத்தூவானம் அடிக்காதவாறு தகரம் கொள்வனவுசெய்து நாட்கூலி அடிப்படையில் பொருத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னையா தேவராசா அவர்கள் வழிமொழிந்தார். இத் தீர்மானத்தினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/13**

அலுவலகப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட சுகாதாரப் பொருட்களுக்கான கொடுப்பனவு ரூபா 75,766.00 தொகையை வவுனியா சண்முகம் ரேடர் கடைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/14**

எமது பிரதேச சபையின் பதில் செயலாளராக 01.09.2021 தொடக்கம் 05.09.2022 வரை கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி. உதயராணி சிவலிங்கம் ( முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I ) அவர்களுக்கு உரிமை கோரச் சான்றிதழ் கோரப்பட்டிருந்தது இதனை அனுப்பிவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/15**

2021ஆம் ஆண்டில் கொரோனா நோய்த்தொற்று காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த மே, யூன் மாதங்களில் 14.05.2021 தொடக்கம் 17.05.2021 வரையான 04 நாட்கள், 21.05.2021 தொடக்கம் 24.05.2021 வரையான 04 நாட்கள், 28.05.2021 தொடக்கம் 31.05.2021 வரையான 04 நாட்கள் மற்றும் 01.06.2021 தொடக்கம் 20.06.2021 வரையான 20 நாட்களுக்கு உள்ளடங்கலாக மொத்தம் 32 நாட்கள் மரக்கறிச்சந்தைகள், மீன் சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள் என்பன வியாபார நடவடிக்கைகள் இடம்பெறாது பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது. பூட்டப்பட்ட காலத்திற்குரிய குத்தகைக் கட்டணத்தை செலுத்தாது விட்டுவிடுவதற்கு குத்தகை ஒப்பந்ததாரர்களால் ரூபா 284,590.70 இற்கு விலக்களிப்பு கோரப்பட்டுள்ளது. எனவே கோரப்பட்ட காலத்திற்குரிய குத்தகை ரூபா 284,590.70 தொகையை உரிய தொடர்பாடலினூடாக கௌரவ ஆளுநரின் அனுமதியினைப்பெற்று விலக்களிப்பு பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் யமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

| பெயர் | சந்தை விபரம் | வருட குத்தகைத் தொகை | 2021 மே 14 தொடக்கம் மே 17 வரை 04 நாட்கள் | 2021 மே 21 தொடக்கம் மே 24 வரை 04 நாட்கள் | 2021 மே 28 தொடக்கம் மே 31 வரை 04 நாட்கள் | 2021 யூன் 01 தொடக்கம் யூன் 20 வரை 20 நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| திரு.ந.கவீஸ்வரன் | நெடுங்கேணி மரக்கறிச்சந்தை | 702,300.00 | 7,551.61 | 7,551.61 | 7,551.61 | 39,016.67 |
| திரு.இ.இராஜேந்திரன் | நெடுங்கேணி மீன்சந்தை | 100,000.00 | 1,075.27 | 1,075.27 | 1,075.27 | 5,555.55 |
| திரு.ஜெ.சுதர்சன் | நெடுங்கேணி கோழிக்கடை இல -01 | 617,000.00 | 6,634.40 | 6,634.40 | 6,634.40 | 34,277.78 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | நெடுங்கேணி கோழிக்கடை இல -02 | 545,500.00 | 5,865.59 | 5,865.59 | 5,865.59 | 30,305.55 |
| திரு.ச.தவேந்திரராசா | கனகராயன்குளம் மரக்கறிச்சந்தை மற்றும் கனகராயன்குளம் தெற்கு உப மரக்கறிச்சந்தை | 663,450.00 | 7,133.87 | 7,133.87 | 7,133.87 | 36,858.33 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | கனகராயன்குளம் கோழிக்கடை | 248,500.00 | 2,672.04 | 2,672.04 | 2,672.04 | 13,805.55 |
| திரு.மு.நிஷாந்தன் | கனகராயன்குளம் மீன்சந்தை | 192,600.00 | 2,070.97 | 2,070.97 | 2,070.97 | 10,700.00 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | புளியங்குளம் மரக்கறிச்சந்தை | 75,000.00 | 806.45 | 806.45 | 806.45 | 4,166.67 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | புளியங்குளம் கோழிக்கடை | 61,500.00 | 661.29 | 661.29 | 661.29 | 3,416.67 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | நயினாமடு கோழிக்கடை | 35,000.00 | 376.34 | 376.34 | 376.34 | 1,944.44 |
| மொத்தம் | | | **34,847.83** | **34,847.83** | **34,847.83** | **180,047.21** |

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/16**

2021ஆம் ஆண்டில் கொரோனா நோய்த்தொற்று காரணமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் 21.08.2021 தொடக்கம் 31.08.2021 வரையான 11 நாட்கள் மற்றும் 01.09.2021 தொடக்கம் 30.09.2021 வரையான 30 நாட்களுக்கு உள்ளடங்கலாக மொத்தம் 41 நாட்கள் மரக்கறிச்சந்தைகள், மீன் சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள் என்பன வியாபார நடவடிக்கைகள் இடம்பெறாது பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்டது. பூட்டப்பட்ட காலத்திற்குரிய குத்தகைக் கட்டணத்தை செலுத்தாது விட்டுவிடுவதற்கு குத்தகை ஒப்பந்ததாரர்களால் ரூபா 367,934.67 இற்கு விலக்களிப்பு கோரப்பட்டுள்ளது. எனவே கோரப்பட்ட காலத்திற்குரிய குத்தகை ரூபா 367,934.67 தொகையை உரிய தொடர்பாடலினூடாக கௌரவ ஆளுநரின் அனுமதியினைப்பெற்று விலக்களிப்பு பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் யமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

| **பெயர்** | **சந்தை விபரம்** | **வருட குத்தகைத் தொகை** | **2021 ஆகஸ்ட் 21 தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை 11 நாட்கள்** | **2021 செப்ரெம்பர் 01 தொடக்கம் செப்ரெம்பர் 30 வரை 30 நாட்கள்** |
|---|---|---|---|---|
| திரு.ந.கவீஸ்வரன் | நெடுங்கேணி மரக்கறிச்சந்தை | 702,300.00 | 20,766.93 | 58,525.00 |
| திரு.இ.இராஜேந்திரன் | நெடுங்கேணி மீன்சந்தை | 100,000.00 | 2,956.99 | 8,333.33 |
| திரு.ஜெ.சுதர்சன் | நெடுங்கேணி கோழிக்கடை இல -01 | 617,000.00 | 18,244.62 | 51,416.67 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | நெடுங்கேணி கோழிக்கடை இல -02 | 545,500.00 | 16,130.38 | 45,458.33 |
| திரு.ச.தவேந்திரராசா | கனகராயன்குளம் மரக்கறிச்சந்தை மற்றும் கனகராயன்குளம் தெற்கு உப மரக்கறிச்சந்தை | 663,450.00 | 19,618.14 | 55,287.50 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | கனகராயன்குளம் கோழிக்கடை | 248,500.00 | 7,348.12 | 20,708.33 |
| திரு.மு.நிஷாந்தன் | கனகராயன்குளம் மீன்சந்தை | 192,600.00 | 5,695.16 | 16,050.00 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | புளியங்குளம் மரக்கறிச்சந்தை | 75,000.00 | 2,217.74 | 6,250.00 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | புளியங்குளம் கோழிக்கடை | 61,500.00 | 1,818.55 | 5,125.00 |
| திரு.செ.கோபாலகிருஸ்ணன் | நயினாமடு கோழிக்கடை | 35,000.00 | 1,034.95 | 2,916.67 |
| திருமதி தர்சிகா பார்த்தீபன் | நயினாமடு மரக்கறிச்சந்தை | 18,000.00 | 532.26 | 1,500.00 |
| மொத்தம் | | | **96,363.84** | **271,570.83** |

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/17**

2022 ஆம் ஆண்டு வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் மீதான இறுதி நடவடிக்கைகளுக்காக விலைமதிப்புக்குழுவை நியமித்து விலைமதிப்பீடு செய்வதென்றும் அழித்தல் குழுவை நியமித்து அழித்தல் நடவடிக்கை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராசா வினாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

| No | Description | In Page | Qty | Disposal/ Sale |
|---|---|---|---|---|
| 1 | Calculator | | 03 | S |
| 2 | Chair plastic | | 09 | D |
| 3 | Finger Print AC121 | | 02 | D |
| 4 | Puncher (2hole) | | 02 | S |
| 5 | Scissor | | 02 | S |
| 6 | Chair plastic | | 01 | S |
| 7 | Rubber stamp date stamp | | 01 | D |
| 8 | Tyre JCB Tani – 14*17.5 NHS | | 02 | S |
| 9 | Chair-Typing Rolling | | 01 | S |
| 10 | Tools – மண்வெட்டி | | 03 | S |
| 11 | Tools- PickAxe | | 01 | S |
| 12 | Tools-Shovel | | 01 | S |
| 13 | Silver Plate | | 11 | S |
| 14 | ஹோட்டல் தூக்கு | | 01 | S |
| 15 | Water Tumbler | | 02 | S |
| 16 | Juice class | | 02 | S |
| 17 | தோசைக்கல் | | 04 | S |
| 18 | Micro சட்டி set | | 01 | S |
| 19 | Silver Basin No.15 | | 03 | S |
| 20 | சில்வர் கரண்டி No.5 | | 06 | S |
| 21 | சில்வர் கரண்டி No.5 | | 05 | S |
| 22 | சில்வர் கரண்டி No.3 | | 04 | S |
| 23 | சில்வர் கரண்டி No.6 | | 04 | S |
| 24 | தோசைக்கரண்டி | | 03 | S |
| 25 | அப்பத்தாச்சி | | 03 | S |
| 26 | மர இடியப்ப உரல் | | 01 | S |
| 27 | முறுக்கு உரல் | | 02 | S |
| 28 | Nivil கத்தி | | 04 | S |
| 29 | இரும்புக்கத்தி | | 01 | S |

**தீர்மான இல :- VNPS/2023/GM/03/60/18**

சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கறிக்கை செயலாளரினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த கணக்கறிக்கையினை சரியென ஏற்று சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. குறித்த தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

தொடர்ந்து ஏனைய விடயங்கள் ஏதும் இல்லாமை காரணமாக நன்றியுரையுடன் பிற்பகல் 2.10 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

…………………

செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.